# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஏப்ரல் 15, 2023

Weekly E-paper • April 15, 2023








## அண்ணாமலையின் அபத்தப் பட்டியல்

சுப.வீரபாண்டியன்

**அடிப்படையான மாற்றங்களை அரசியலமைப்பில் கொண்டு வரவேண்டும்!**

வெற்றிச்செல்வன்

**ஆளுநருக்கான நிதி, முறைகேடான செலவு!**

தலையங்கம்

**வரலாற்றை மாற்றும் சனாதனச் சித்தாந்தம்!**

நேர்காணல்: பேராசிரியர் ஹாஜாகனி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 15, 2023

Weekly E-paper ● April 15, 2023


# அண்ணாமலையின் அபத்தப் பட்டியல்

**சுப.வீரபாண்டியன்**

தமிழ்நாடு பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை அவர்கள், திமுகவின் ஊழல் பட்டியலை வெளியிடப் போவதாகப் பல்வேறு முன்னறிவிப்புகளையும், மிகப்பெரிய விளம்பரங்களையும் செய்துவிட்டு இன்று காலை அதனை வெளியிட்டு இருக்கிறார். தமிழ்நாட்டு அரசியலில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிற பட்டியல் என்று பாஜகவினரும், பாஜகவின் ஊது குழல்களும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நடந்திருப்பது முற்றிலும் வேறாக இருக்கிறது!

திமுகவின் அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோர் என்னென்ன ஊழல்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை அண்ணாமலை சான்றுகளோடு விளக்கப் போகிறார் என்றுதான் பலரும் எண்ணினர். ஆனால் அவர் முதலமைச்சர் குடும்பத்தினரின் சொத்துப் பட்டியலை வெளியிட்டு இருக்கிறார்! அவற்றுள் பல பினாமிகளின் பெயரில் உள்ள சொத்துகள் என்றும் கூறியிருக்கிறார். அதற்கான ஆதாரத்தை மட்டுமின்றி, சொத்துகளுக்கான ஆதாரத்தையும் அவர் காட்டவில்லை. அவர் வெளியிட்டு இருப்பது ஊழல் பட்டியலில்லை, அது வெறும் சொத்துப் பட்டியல் என்று சிலர் கூறுகின்றனர். உண்மையில், அது ஊழல் பட்டியலும் இல்லை, சொத்துப் பட்டியலும் இல்லை. வெறும் அபத்தப் பட்டியல் என்று தான் சொல்ல வேண்டும்!

அவர் குற்றம் சாட்டியுள்ள மிகப் பலர் தேர்தலில் போட்டியிட்டவர்கள். அனைவருமே வருமான வரி கட்டுகின்றவர்கள். அப்படி இருக்கும் போது அவர்கள் சொத்துப் பட்டியலை ஏற்கனவே வெளியிட்டு இருப்பார்கள். வருமான வரித்துறையிடமும் சமர்ப்பித்திருப்பார்கள். அதில் தவறு இருக்கிறது அல்லது அவை ஊழலின் மூலம் சேர்த்த சொத்துக்கள் என்றால், வருமான வரித் துறையும், அமலாக்கத் துறையும் இந்நேரம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படாத போது, இந்த சொத்துகள் ஊழலின் மூலம் சேர்க்கப்பட்டவை என்று அண்ணாமலை சொல்வாரானால், அவர் வருமான வரித்துறை மற்றும் அமலாக்கத்துறை இரண்டும் செயலற்றுப் போய் இருக்கின்றன என்று கூறுவதாகவே பொருள்!



தன்னை அறியாமலேயே தான் ஒரு ஊழல் குற்றவாளி என்பது போன்ற பிம்பத்தையும் அண்ணாமலையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். தான் கட்டியிருக்கும் கடிகாரத்தின் விலை 3 லட்சம் ரூபாய் எனக் கூறும் அவர், தன்னால் வீட்டு வாடகையைக் கூடக் கட்ட முடியவில்லை என்றும், வீட்டு வாடகை, எரிபொருள் செலவு போன்றவற்றைத் தன் நண்பர்கள்தாம் பார்த்துக் கொள்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார். வீட்டு வாடகை கூட கட்ட முடியாத ஒருவர் 3 லட்சம் ரூபாய்க்கு எப்படிக் கடிகாரம் வாங்கினார் என்பது ஒரு புறம் இருக்க, இவருக்காக வாடகை மற்றும் செலவுகளை ஏற்றுக் கொள்ளும் அந்த நண்பர்கள் யார் என்ற கேள்வி மறுபுறம் எழுகிறது. என்ன நோக்கத்திற்காக அதை அவர்கள் செய்கிறார்கள் என்கிற கேள்வியும் எழுகிறது! ஒன்றிய அரசின் ஆளுங்கட்சியாக இருக்கும் பாஜகவின் மாநிலத் தலைவரிடம், சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்க முயற்சி செய்கிறார்களா? அண்ணாமலை ஒரு ஊழல்வாதிதானோ என்கிற ஐயத்தையும் இந்த நேர்காணல் உருவாக்குகிறது!

திமுக ஒரு ஊழல் கட்சி என்பதற்கு அண்ணாமலை இரண்டு ஆதாரங்களைக் காட்டியுள்ளார். ஒன்று. திமுகவை விட்டுப் பிரிந்து போன நேரத்தில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய வனவாசத்தில் உள்ள செய்தி. இன்னொன்று, திமுகவைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டு இருந்த நேரத்தில், ஜெயகாந்தன் குறிப்பிட்ட ஒரு குற்றச்சாற்று!

கட்சியிலிருந்து விலகியவர்கள் அல்லது ஒரு கட்சியை எதிர்க்கிறவர்கள், அந்த கட்சியின் மீது சொல்லும் குற்றம் குறைகளை எல்லாம், ஊழலுக்கான ஆதாரம் என்று சொன்னால், அண்ணாமலையின் ஐபிஎஸ் பட்டத்தை அல்லவா நாம் சந்தேகப்பட வேண்டி இருக்கிறது! அப்படிப் பார்த்தால் அண்ணாமலையைப் பற்றி, காயத்ரி ரகுராம் சொன்ன குற்றச்சாட்டுகளை நாம் அப்படியே எடுத்துக் கொள்ளலாமா? இப்போது ஆருத்ரா மோசடியில் அவர் பெயர் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதை நாம் ஆதாரமாகக் காட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியுமா? என்ன கேலிக் கூத்து இதுவெல்லாம்!

ஒரு வலையொளி நேர்காணலில், பாஜகவின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சீனிவாசனிடம், திமுக வின் ஊழல் பட்டியலை வெளியிடப் போவதாகச் சொல்லும் அண்ணாமலை, ஏன் அதிமுக ஊழல் பட்டியலை வெளியிடவில்லை என்று கேட்கப்படுகிறது. அதற்கு அவர், “நாங்கள் பசுஞ்சாணத்தைத் தெளிக்கிறோம் என்றால் , ஏன் குதிரைச் சாணத்தையும் சேர்த்துத் தெளிக்கவில்லை என்று கேட்கிறீர்கள் என்கிறார். இவ்வளவு புத்திசாலிகளைப் பாஜக எப்படித் தாங்குகிறதோ தெரியவில்லை!

அவர் ஐபிஎஸ், இவர் பேராசிரியர்! பாவம் பாஜக!!

# அடிப்படையான மாற்றங்களை அரசியலமைப்பில் கொண்டு வரவேண்டும்!

**வெற்றிச்செல்வன்**



கடந்த 10.04.2023 அன்று, தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். “சட்டப்பேரவைகளில் மாநில அரசுகள் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு, ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்க, குறிப்பிட்ட காலநிர்ணயம் செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசு மற்றும் குடியரசுத் தலைவரை வலியுறுத்தும்” அத்தீர்மானம் சட்டப்பேரவையில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் அவர்கள் பேசியபோது, “சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் அதிகாரத்தைச் சட்டப் பேரவைகளுக்கு வழங்கிவிட்டு, அதற்கு ஒப்புதல் கையெழுத்துப் போடும் உரிமையை ஒரு நியமன ஆளுநருக்கு வழங்கியது மக்களாட்சி மாண்பு ஆகாது. எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தும் முன்னெடுப்புகளை நாம் மேற்கொள்ள வேண்டும்” என்று பேசியுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1963 ஆம் ஆண்டு மாநிலங்களவையில் பேசும்போது, “அரசியல் சட்டத்தை ஆராய வேண்டும். அரசியல் சட்டம் பற்றிய புதிய மதிப்பீடு (reappraisal) பெற வேண்டும்” என்று பேசினார். மாநில சுயாட்சித் தீர்மானத்தைச் சட்டப்பேரவையில் 1974ஆம் ஆண்டு கொண்டு வந்தார் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தீர்மானமானது, “பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துகளை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது” என்பதே.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் இருவரும் உயர்த்திய குரலின் தொடர்ச்சியாக நமது முதல்வர் அவர்களின் தீர்மானத்தை நம்மால் பார்க்க முடிகிறது.

இந்தியா பன்முகத்தன்மை கொண்ட பல்வேறு தேசிய இனங்களின் நாடு. இந்த நாட்டில் உள்ள தேசிய இனங்களின் கலாச்சாரத்தையும், உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் மாநிலங்களுக்கு உரிமைகள் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு உரிமைகள் பகிர்ந்தளிக்கப்படாதது மட்டும் அல்லாமல், ஒன்றிய அரசை ஓர் அதிகாரக் குவிமையமாக ஆக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது.

அந்த அதிகார மையத்தின் ஓர் அங்கமாகத்தான் ஒவ்வொரு மாநிலத்திலும் நியமிக்கப்படும் ஆளுநர் இருக்கிறார். மாநில அரசு செயல்படாத வகையில் பார்த்துக் கொள்வதுதான் ஆளுநரின் அன்றாடப்பணியாக அமைந்திருக்கிறது. கோடிக்கணக்கான மக்களின் ஆதரவினை வாக்குகள் மூலமாகப் பெற்று, மக்களின் பிரதிநிதிகள் மூலமாக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் சட்டங்களை ஆளுநர் சட்டை செய்வதே இல்லை என்பது ஜனநாயகத்தின் பேரவலம். நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவரைக்கூட, பதவியில் இருந்து அகற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் வெறும் நியமனப் பதவியில் இருக்கும் ஆளுநரை அகற்ற மாநில சட்டமன்றங்களுக்கு அதிகாரம் இல்லை. இப்படி ஒரு ஜனநாயகமற்ற அரசியலமைப்புச் சட்டம் வேறெந்த நாட்டிலும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

இந்தித் திணிப்பில் தொடங்கி, நீட் தேர்வு திணிப்பு வரை மறுக்கப்படும் உரிமைகள் அனைத்தும் அரசியலமைப்புச் சட்டத்தின் பேரால் நிகழ்ந்து வருகின்றன. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைகளுக்குத் தற்காலிகத் தீர்வுகள் போதாது.

அடிப்படையான மாற்றங்கள் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட வேண்டும்.

அப்போதுதான் எல்லா தேசிய இனங்களுக்கும், மொழிகளுக்கும் சம உரிமை வழங்கும் அரசியலமைப்பாக இந்திய அரசியலமைப்பு இருக்கும். அவ்வகையில் முதல்வர் அவர்களின் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான கோரிக்கை மிகவும் நியாயமானது; அவசியமானது. தீர்மானம் நிறைவேற்றியதோடு நில்லாமல், தமிழ்நாடு அரசின் இத்தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குமாறு 12.04.2023 அன்று பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநில முதல்வர்களுக்குக் கடிதமும் எழுதியுள்ளார், நமது முதல்வர்.

திராவிட முன்னேற்றக் கழகம் மற்ற மாநிலங்களையும் கூட்டி மாநில சுயாட்சி மாநாட்டை விரைந்து நடத்த வேண்டும். அதன் மூலமாக மாநிலங்களின் உரிமை சார்ந்த உணர்வு மற்ற மாநிலங்களுக்கும் சென்று சேர வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து எழும் இந்தக் கோரிக்கை மற்ற மாநிலங்களுக்கும் பரவ வேண்டும். அப்போதுதான் இக்கோரிக்கை வலிமை பெறும். அப்பணியை நமது முதல்வர் திறம்படச் செய்வார் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு உள்ளது.

## பொறுப்பாளர் நியமனம்



இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக வழக்கறிஞர் இராம. வைரமுத்து, பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். பணி சிறக்க அவருக்கு வாழ்த்துகள்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநருக்கான நிதி, முறைகேடான செலவு!

.ஆளுநருக்கான வீட்டுச் செலவுக்கு கடந்த ஆண்டு 15.93 கோடி ரூபாய் என்று இருந்ததை, இந்த ஆண்டு 16.69 கோடி ரூபாயாக அதிகப்படுத்தியுள்ளது தமிழ்நாடு அரசு.

இரண்டு கோடி, இரண்டு கோடி என மொத்தம் நான்கு கோடி ரூபாய், “அட்சய பாத்திரம்” என்ற திட்டத்திற்கு வழங்கப்பட்டதாகச் சொன்னாலும், அதை ஆளுநருடைய வீட்டுச் செலவு வங்கிக் கணக்கில் மாற்றப்பட்டு உள்ளதாகவும், மீதி வேறு ஒரு இடத்திற்குச் சென்றுள்ளது என்றும் நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் சட்டமன்றத்தில் கூறியிருக்கிறார்.

Petty grants என்ற கணக்கில் மொத்தம் ரூ.18.38 கோடி கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 11.32 கோடி ரூபாய் ஆளுநர் வீட்டுச் செலவுக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதன் செலவுக் கணக்குகள் அரசுக்குத் தெரியாது. இது விதிமுறை மீறல் என்று சுட்டிக் காட்டுகிறார் நிதியமைச்சர்.

2021 செப்டம்பருக்குப் பிறகு யு.பி.எஸ்.சி மாணவர்கள் கூட்டத்திற்கு 5 லட்சம், தேநீர் விருந்துக்கு 30 லட்சம், ஊட்டி ராஜ்பவனில் கலாச்சார விழாவிற்கு 3 லட்சம் என்று petty grants நிதியில் செலவிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் ஒரே நபருக்கு ரூபாய் 58 லட்சம் வீதம், மீண்டும் மீண்டும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு போனஸ் என்று ஒரு முறை 18



லட்ச ரூபாயும், இன்னொரு முறை 14 லட்ச ரூபாயும் கொடுக்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர்.

ஒன்றிய அரசின் முகவராக (Agent) இருந்து கொண்டு சட்ட மசோதாக்களுக்குக் கையெழுத்திடும் ஒருவருக்கு அரசு கொடுக்கும் நிதியே மிக அதிகம். அதிலும் விதிமுறை மீறல் என்பது அதிர்ச்சியாக இருக்கிறது.

இதுபோன்ற விதிமீறல் கட்டுப் படுத்தப்படும் என்று நிதியமைச்சர் சொல்லியிருப்பது ஆறுதலாக இருக்கிறது.

அறிஞர் அண்ணா தெளிவாகச் சொன்னார்,“ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை”

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



பேரவைத் தலைமை அலுவலகத்தில் சென்னை மாவட்டக் கலந்தாய்வுக் கூட்டம் 03-04-2023 அன்று மாவட்டத் தலைவர் கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ‘பெல்’ ராஜன், அ.லாரன்ஸ், எட்வின், திராவிடமணி, லோகபாலன், வெற்றிச்செல்வன், மதிவாணன், கலைவாணன், நன்முகில், கருணாகரன், ரமெஷ்துரை உள்ளிட்ட பேரவைத் தோழர்கள் கலந்து கொண்டனர். பேரவை நாள் நிதி திரட்டுவது உள்ளிட்டவை குறித்துப் பேசப்பட்டன. சென்னை மாவட்டப் பொருளாளராகத் தோழர் லோகபாலன் நியமிக்கப்பட்டார்.



காஞ்சி மாவட்டச் செயலாளர் இளமாறன் வேண்டுகோளை ஏற்று, துணைப் பொதுசெயலாளர்கள் சிங்கராயர், சிற்பி செல்வராசு, தலைமை நிலையச் செயலாளர் எட்வின், மா.உதயகுமார், மானேக்ஷா, அன்பு, இளங்கோ ஆகியோர் 09-04-2023 அன்று பேரவை நாள் நிதி திரட்ட மேடவாக்கம் பகுதிக்கு வருகை தந்தனர்.

# வரலாற்றை மாற்றும் சனாதனச் சித்தாந்தம்!

## நேர்காணல்: பேராசிரியர் ஹாஜாகனி

**என்சிஇஆர்டி பாடத்திட்டத்தில் வரலாறு திரித்து எழுதப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகின்றன. அண்மையில் கிடைத்த செய்தியின்படி பதினோராம் வகுப்பு அரசியல் பாடத்திட்டத்தில் இருந்த மௌலானா அபுல் கலாம் ஆசாத் பெயர் நீக்கப்பட்டிருக்கிறது. இது பற்றிய உங்கள் கருத்து.**



ஒன்றியத்தை ஆண்டு கொண்டிருக்கும் பாஜக தலைமையிலான ஆட்சி ஒரு சித்தாந்தத்திற்காகச் செயல்படுகிறது. காந்தி தேசத்தைக் கோட்சே தேசமாக ஆக்கிவிட வேண்டும் என்பதுதான் அதனுடைய சுருக்கமான வடிவம். இவர்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதினால் அதில் காந்தியின் பெயரே இருக்காது. இதைத்தான் அண்மையில் சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். காந்தியாரின் பெயரே இல்லாமல் காந்தியாரின் படமே இல்லாமல் விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆளுநர் மாளிகையில் திரையிடுகிறார்கள். இது உலகிற்கே தெரியும். அவர்கள் ஏன் இதை நீக்குகிறார்கள். இந்த நாட்டிற்குப் பெருமை என்று அவர்கள் சொல்வது, இது ரிஷிகள் உருவாக்கிய தேசம், வேத காலத்தில் இந்த தேசம் இப்படி இருந்தது என்பது. இந்த நாட்டினுடைய உண்மையான வரலாற்றை மாணவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது, இவர்களுடைய இந்தக் கற்பிதங்களைத்தான் அறிந்து கொள்ள வேண்டும், அதை உண்மை என்று நம்ப வேண்டும் என்று நினைக்கிறார்கள். என்சிஇஆர்டி என்பது கல்வியை வடிவமைக்கிற தனித்துவமான அமைப்பு. தனித்துவமுடைய ஜனநாயக அமைப்புகள் அனைத்துமே இவர்கள் ஆட்சியில் சீர்குலைக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டு இவர்களுடைய கிளைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. நீதித் துறையாக இருந்தாலும் சரி, தேர்தல் ஆணையமாக இருந்தாலும் சரி எல்லாவற்றின் மூலமும் இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்படும் அளவிற்கு சம்பவங்கள் நடக்கின்றன.

புல் புல் பறவையில் ஏறி சாவர்க்கர் அந்தமான் சிறையிலிருந்து இந்தியாவிற்கு வந்து போனார் என்று பள்ளிப்பாடத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். புல் புல் பறவையில் ஒரு மனிதர் பயணிக்க முடியுமா? அதுவும் சிறையில் இருக்கும் ஒரு மனிதர் புல்புல் பறவையில் ஏறி டெல்லிக்கு வந்தார் என்பதை வரலாறாகச் சொல்லிக் கொடுப்பவர்கள் காந்தியாரின் போராட்டத்தைக் கசப்பாகத்தான் பார்ப்பார்கள். சுதந்திர இந்தியாவின் கல்விக் கட்டமைப்பை உருவாக்கிய அபுல் கலாம் ஆசாத் அவர்களுடைய பெயர் அவர்களுக்கு ஆகவே ஆகாது. UGC, IIT, IIM, சாகித்ய அகாடமி போன்ற கட்டமைப்புகளை உருவாக்கியவர் அபுல் கலாம் ஆசாத். நவீன இந்தியாவின் கல்விச் சிற்பி என்று அபுல் கலாம் ஆசாத் அவர்களைத்தான் கொண்டாடுவார்கள். அவருடைய பிறந்த நாளை இந்திய அரசு தேசியக் கல்வி நாளாகக் கொண்டாடுகிறது. அவருடைய பெயரையே இவர்கள் நீக்குகிறார்கள் என்றால் இவர்கள் வேறு எதை நீக்க மாட்டார்கள். இவர்கள் நீக்க வந்தவர்கள், நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் ஒரு சூழலை உருவாக்க நினைக்கிறார்கள்.

ஆகவே பாடப்புத்தகம் என்பது வருங்காலத் தலைமுறையினரின் மேன்மைக்கும், உயர்வுக்கும், நல்லிணக்கத்திற்கும், சமாதான சமத்துவமான வாழ்வுக்கும் வழி வகுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் இவர்கள் வடிவமைக்கக்கூடிய பாடங்கள் எல்லாம் சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்களை, தலித்துகளை, கிறித்தவர்களை இந்த நாட்டின் எதிரிகள் என்று படிக்கின்ற மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் அல்லது அவ்வாறு நம்ப வேண்டும் என்ற நோக்கோடு உருவாக்கப் படுகின்றன. இது ஹிட்லரின் பாணி. ஹிட்லர், ஜெர்மானிய இனம் மட்டும்தான் மேன்மையானது, அதற்கு மட்டும்தான் ஆளும் தகுதி உண்டு என்பதை எது பேசுகிறதோ அதுதான் சரியான கல்வி முறை என்று சொன்னார். அதைத்தான் இவர்கள் செய்து வருகிறார்கள். வெறுப்பு அரசியலின் வித்தைகளைக் கல்வியின் மூலமாக மாணவர்கள் மனங்களில் விதைக்க நினைக்கிறார்கள். அதனுடைய விளைச்சலாகத்தான் இந்தப் பாடங்களை நாம் பார்க்க முடியும்.

**மௌலானா அபுல் கலாம் ஆசாத் பெயரில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகையையும் சில நாள்களுக்கு முன்னர் ஒன்றிய அரசு நிறுத்தி விட்டது. அதைப் பற்றிய உங்களுடைய கருத்து.**

மாணவர்களுக்குத் தரக்கூடிய பிரீ மெட்ரிக் போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப்பை நிறுத்தினார்கள். அதற்குத் தமிழ்நாடு முதலமைச்சர் சரியான பதிலடி கொடுத்தார். நாங்கள் எல்லாம் கோரிக்கை வைத்தோம். இது ஏழைகளுடைய கல்வியை இருளாக்கக் கூடிய செயல். தமிழ்நாட்டில் பயன்பெறக்கூடிய மாணவர்கள் ஏராளமானோர் இருந்தார்கள். அதேபோல் இந்தியா முழுவதுமே பள்ளிக் கல்வியைப் பாதியில் நிறுத்தக்கூடியவர்கள் பட்டியலில் முஸ்லிம்கள்தான் முதல் இடத்தில் இருந்தார்கள். இது நீதியரசர் ராஜிந்தர் சச்சார் அவர்களுடைய உயர்நிலைக் குழுவும் ரங்கநாத் மிஸ்ரா அவர்களுடைய ஆணையமும் தங்களுடைய ஆய்வு முடிவுகளில் தந்த பிறகு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தில் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட திட்டமாகும். பள்ளிக்கல்வியைப் பாதியிலேயே நிறுத்தக்கூடியவர்களாக முஸ்லிம்கள் இருந்ததால் அவர்களுக்கு இந்த உதவித் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இவர்கள் அதானி அம்பானிகளுக்கு இந்த நாட்டை அர்ப்பணிப்பதற்காக வந்தவர்கள். ஏழை எளியவர்களின் கல்வியைப் பற்றிச் சிறிதும் கவலையற்றவர்கள். அதனால் மிகுந்த கல் நெஞ்சத்தோடு அபுல் கலாம் ஆசாத் கல்வி உதவித் திட்டத்தை ரத்து செய்தார்கள். ஆனால் நீங்கள் நிறுத்தினாலும் நாங்கள் கொடுப்போம் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம் எழுதியிருப்பதை நாம் இந்த இடத்தில் நினைவுகூர வேண்டும்.

**நேர்கண்டவர்: மா.உதயகுமார்** ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian